**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.NO. 159/2021**

**Deposition of Witness for P.W.1**

| | | |
|---|---|---|
| NAME | - | செல்வகுமார் |
| FATHER'S NAME | - | பாக்கிராஜ் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.11.2023.**

A1 A2. A5 Present A6 Produced.A3 A4 A7 ABSENT. PETITION U/S.317 CRPC FILED AND ALLOWED.

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் தாலுக்காவில் கொத்தையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டம் அணைகட்டு தாலுக்கா ஒடுகத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 03.01.2015 தேதியில் ஒடுகத்தூரில் உள்ள வேணுகோபாலுக்கு சொந்தமான சர்வே எண்.90/1 ல் உள்ள கிணற்றில் அடையாளம் தெரியாத 30 வயது மதிக்கதக்க அடையாளம் தெரியாத ஆண் சடலம் அழுகிய நிலையில் இருப்பதாக பொதுமக்கள் பேசிக் கொண்டு இருந்ததை கேட்டு அந்த கிணற்றுக்கு சென்று நான் பார்த்த போது ஒரு ஆண் பிரேதம் கிணற்றில் இருந்ததை பார்த்து விட்டு வேப்ங்குப்பம் காவல் நிலையத்திற்கு சென்று ஒரு எழுத்து மூலமான புகார் கொடுத்தேன், நான் கொடுத்த அந்த புகார்

தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது அது அ.ச.1 ஆகும். அதன் பிறகு 04.01.2015 தேதியில் இறந்த நபர் ஒ ராஜாபாளையத்தை சேர்ந்த சீனு எ சீனிவாசன் என தெரியவந்தது. 26.11.2020 ஆம் தேதியில் அத்தி குப்பம் கிராமத்தை சேர்ந்த லோகு என்பவர் வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் ஆஜராகி தானும்,வேறு 6 நபர்கள் சேர்ந்து சீனு எ சீனிவாசனை அடித்து கிணற்றில் தூக்கி போட்டு விட்டதாக ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தாகவும் அதன் பிறகு 27.11.2020 ஆம் தேதியில் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளர் என்னை மீண்டும் விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் புகார் கொடுத்த போது இறந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எப்போது கிணற்றில் விழுந்தார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிணற்றுக்கு முன்னர் வேணுகோபால் என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு முன்னாடி வேணுகோபால் என்பவரின் கொசுவலை பேக்டரி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ரோடிற்கும் வேணுகோபால் பேக்டரி தாண்டி இடையில் காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் எனக்கு ஞபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்பதால் தான் அந்த இடத்தை பற்றிய அடையாளங்கள் குறித்து என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று பிணத்தை யார் முதலில் பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் அந்த பிணத்தை கிணற்றில் இருந்து மேலே எடுத்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பிணத்தின் மீது என்ன ஆடைகள் இருந்தது என்றும் அது எந்த கலரில் இருந்தது என்பது குறித்தும் குறிப்பிட்டு என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு யார் என்ன வகையான தகவல் சொன்னார்கள் என்பது குறித்தும் என்னுடைய புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்த நபரின் அடையாளம் தெரிந்தது குறித்து போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வேணுகோபாலையோ

அல்லது அவரின் பேக்டரியில் வேலை செய்யும் நபர்களிடேமோ நான் எந்த விசாரணையும் செய்தேனா என்றால் இல்லை. ஒடுகத்தூரில் இருந்து நான் எப்போது பணி மாறுதல் பெற்றேன் என்றால் 2016 ல் பெற்றேன். நான் பணி மாறுதல் பெற்ற பிறகு நடந்த விவரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் கிராம உதவியாளர் வெங்கடேசன்  சொன்னார். என்னுடைய முதல் விசாரணைக்கான வாக்குமூலத்தில் லோகு என்பவர் காவல் நிலையத்தில் சரண் அடைந்ததாக கூறியுள்ளது குறித்து அந்த தகவலை யார் எனக்கு சொன்னார்கள் என்றால் அந்த அதிகாரி பெயர் எனக்கு தெரியாது. என்னிடம் மறு வாக்குமூலம் எந்த நிலை அதிகாரி பெற்றார் என்றாலும் எங்கு வைத்து விசாரணை செய்தார் என்றாலும் வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் பாலசுப்பிரமணியன் என்ற காவல் ஆய்வாளர் பெற்றார்.  நான் வேப்பங்குப்பம் காவல் நிலையத்திற்கு மறு வாக்குமூலம் அளிக்க வந்தது குறித்து நிருபிக்க ஆவணம் எதுவும் நிதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் போலீசார் குறிப்பிட்ட தகவல்களை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY